Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ ஐப்பசி ௴ உச௳ வெள்ளிக்கிழமை (9 NOV. 1956) [இல-௩0]

# எரிகின்ற நெருப்பிற் சுட்டுப் பிடிக்கும் கொள்ளை வியாபாரிகள்

## 'போர்' என்று சொன்னாற் போதும் பொருட்களின் விலைகள் பறந்து ஏறுகின்றன

### இந்த அட்டூழியத்தை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு ஆற்றலில்லையா?

எகிப்திலே இங்கிலாந்துதேச யுத்த விமானங்கள் குண்டு போட்டன என்று முதல்முதற் செய்தி வெளிவந்ததும் உள்ளங்கால் தொடங்கி உச்சி வரையும் ஒரே குதூகலமாய் எழும்பிவிட்டார் அந்தப் ரிண்ணியவான் 'கள்ளவியாபாரி'. இருத்தல் இரண்டு ரூபா மிளகாய் என்று ஆரம்பித்துவிட்டார் 'கொள்ளைப் புராணத்தை. கடுகு சீரகம் முதற்கொண்டு காய் கனி ஈறாக எல்லாம் யுத்தத்தாலே தாக்கப்பட்டு விட்டன. அரிசி, நெல், மா, நெய் அந்த வகையில் ஒன்றும் விலக்கப்படவில்லை. சண்டை போடுபவர்கள் யாரோ. ஆபத்துக்குட்டவர்கள் ஆயிரம் ஆயிரம் காத வழிக்கப்பால் இருப்பவர்கள்.

இந்த அடாத உள்ளூர்ப் போரை அடக்க முடியாது அந்தரப்படுகின்றது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம். கட்டுப்பாட்டு விலைகளை விதித்துவிட்டாற் போதும் என்று எண்ணுகிறார் மந்திரியார் பிலிப்பு குணவர்த்தனா. அரிசி பத்துச் சதம் குறைந்தும் நடைமுறையில் விலையேறிய பொழுது நிலைமையைச் சமாளிக்க முடியாத மந்திரியாா கள்ள வியாபாரப் பைசாசங்கள் துள்ளி எழுந்திருக்கும் பொழுதிலா ஊரவர்களுக்கு ஆறுதல் அளிக்கப்போகின்றார்? அதிகப்படியாக விற்கும் முதலாளி வகுப்பைச் சேர்ந்த வியாபாரிகள்மீது எதிராக நடைமுறைகள் எடுக்கத் தொழிலாளர் தோழன் குணவர்த்தன தயங்குவதேனோ?

ஒருசதம் தானும் விலைகூட்டி விற்கும் வியாபாரிகளுக்குச் சிறைத் தண்டனை விதித்து ஒழுங்கை ஏற்படுத்த முடியாத அரசாங்கம் ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டிருப்பது நூதனமாயிருக்கின்றது.

அது ஒருபுறம் இருக்கப் பொதுசனங்களும் இந்தக் கவலையான நிலைமைக்கு உதவியளிக்கிறார்கள் என்பதும் உண்மையே. மிளகாய் விலையேறிவிட்டால் அதை ஒரு சிறிது காலத்திற்கு உபயோகியாமல்விட்டால் வியாபாரிகள் அதை யாருக்கு விற்பது? யுத்தம் என்றவுடன் பொருள்களை வாங்கிக் குவித்துவிடவேண்டுமென்று ஓடோடியும் கொள்ளை வியாபாரிகளுக்கு உதவி புரியும் பொதுசனமும் இந்த வகையிலே குறும்பர்களுக்குஉறுதுணையாயிருக்கின்றார்கள். பொதுசனம் நினைத்தாற் கள்ள வியாபாரம் தலையெடுக்க முடியாது என்பதைப் பொதுசனம் உணருதல் வேண்டும்.

அரசியல் அலை

# இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மட்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமா?

### உருசியா கங்கேரியை உள்விழுங்குவது பொதுவுடைமையினருக்கு உடன்பாடா?

இலங்கையிலே ஆர்ப்பாட்டக்காரர்கள் என்று ஒரு சாரார் இருக்கின்றார்கள், எந்தத் தேசத்தில் என்ன நடைபெற்றாலும் அதை ஒரு சாட்டாக வைத்துத் தங்கள் கருமம் பார்க்கும் தொழில்தான் இந்த ஆர்ப்பாட்ட சூரர்களின் கொள்கை. அப்படியிருந்தாலும் சுதந்திரத்தைச் சூறையாடும் நாடுகளுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டஞ் செய்யும்பொழுது சில நாடுகளின் குற்றத்தைப் பொருட்படுத்த இவர்தளுக்கு இதயம் ஒருப்படுகின்றதில்லை. ஏன்? உண்மையான அபிமானத்தின் அறிகுறி இதுதான்!

எகிப்தை இரு வல்லரசுகள் தாக்கி அட்டூழியஞ் செய்கின்றன. இந்த அட்டூழியத்தைக் கண்டனஞ் செய்த இன்னொரு வல்லரசு தயவு தாட்சணியம் இன்றிக் கங்கேரியை அடிமைப்படுத்தக் குண்டுமாரி பெய்கின்றது. இதன் கருத்தென்ன? வல்லரசுகள் தாங்கள் எல்லாப் பலாத்காரத்தையுஞ் செய்து விடலாம் என்பதா? அல்லது இந்தப் பூவுலகம் இங்கிலாந்து, பிரான்சு, உருசியா முதலிய நாட்டாண்மை நாடுகளின் சொந்தப் பொருளாகிவிட்டதா?

'ஐக்கிய நாடுகள்' என்ற உலக அமைப்பு இப்பொழுது ஒன்றுஞ் செய்யமுடியாமற் கவலைப்படுகின்றது. அந்த அமைப்பின் அத்திபார கர்த்தாக்களும் அதன் பாதுகாப்புத் தேவதைகளும் நியாயம் நீதி என்ற ஒழுக்க நெறியைக் காற்றிலே வீசிவிட்டு அசுரக் கோலங்கொண்டு ஆதிக்கம் நடாத்துவதென்றால் இந்த ஐ. நா. வுக்கு என்ன தத்துவம் என்ன யோக்கியதை இருக்கப்போகின்றது.

வேலி பயிரை மேய்ந்தவாறு வல்லரசுகளே சின்னஞ்சிறு தேசங்களைக் கொள்ளையடித்து ஏகாதிபத்திய இறுமாப்புக் கொள்வதென்றால் உலகில் இனிமேல் வல்லரசுகள்அல்லாத நாடுகள் வாழ்வதற்கு வழியில்லைப்போலும்.

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்வைத்தியகலாநிதி விக்கிரமசிங்கா உருசியாவின் நாட்டாண்மை உருஆட்டத்தை வியந்து பேசுகின்றார். கங்கேரியிலுள்ள தேசாபிமானிகள் புரட்சிக்காரராம். அந்த வகையிலேதான் இலங்கையிலுள்ள புரட்சிக்காரர் தேசாபிமானிகளாய்த் தோற்றமளிப்பது.

# கங்கேரி தனி நாடா?

### உருசியாவின் காற் 'செருப்பா'?

மத்திய ஐரோப்பாவிலே பழம் பெருமையுள்ள கங்கேரியின் தலைவிதி நிலையில்லாததொன்று. ஜர்மானியரின் நெருக்கடியில் அகப்பட்டு உலக யுத்தத்தின் பின் சுய நாடாகிப் பின் கிட்லரால் ஆக்கிரமிக்கப்பட்டுஈற்றிலே தனி நாடாகிய கங்கேரி பொதுவுடைமைக் கொள்கைப் போர்வையிலே தன் மனம் தன் மானம் தன் எண்ணம் தன் அந்தஸ்து என்ற இவை இல்லாமல் உருசியாவின் அடிமை நாடாய் இருந்து வந்தது. யூகோசிலாவியாவிலே பொதுவுடைமையினர் உருசிய பொதுவுடமைக்கொள்கைக்கு அமையமாட்டோமென்று எதிர்த்து வெற்றி பெற்றதன் பயனுகக் கங்கேரியிலும் இந்த இயக்கம் பவர் புரட்சி வீரராகத் தோன்றிப் புது அரசாங்கம் அமைத்து வந்தது உருசியாவுக்கு உருவை ஏற்றிவிட்டது. பொதுமனிதனுக்கும் அமைதிக்கும் பாடுபடுகின்றோம் என்று புலம்பித்திரியும் உருசிய பொதுவுடைமைச் செம்படையினர் கங்கேரியிற் படையெடுத்து விட்டது மன்றி நாகியென்பவரையும் கைதிசெய்துவிட்டனர்.

நாகரிகத்தின் நயம் எங்கேயிருக்கின்றது. நிலைப் பரப்பாற் பெருமையுடைய உருசியா இதர தேசங்களையும் தன்னுடன் இணைக்கப் பட்டப் பகலிலே கெட்டித்தனம் காட்டுகின்றது. அதே வேளையிற் சமாதானம் விரும்பி ஐ.நா. விலும் கதைக்குகொள்கின்றது.

# எகிப்து - இசுரவேல்

### வேற்றுமையிற் சில இரகசியங்கள்

எகிப்தை இசுரவேல் தாக்கியது உண்மை. இசுரவேல் ஒருவித முன் அறிவித்தலும் இல்லாது தாக்கியதும் உண்மை. ஐ. நா. அமைப்புமூலம் சமாதான முறையிலே நீதிபெற முயலாது தாக்கியதும் உண்மை. இருந்தும் 1951ம் ஆண்டு ஐ. நா. பாதுகாப்புச் சங்கத் தீர்மானத்தின்படி எகிப்து செய்யவேண்டிய கடமையிலே தவறிவிட்டது என்பதை எகிப்துமறைக்கமுடியாது.

சூவெசக் கால்வாயை இசுரவேற் கப்பல்கள் பயன்படுத்தும் உரிமையை எகிப்துதடைசெய்யக்கூடாதென்பதே 1951 ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தின் சாராம்சம்.

1951ம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்தத்தீர்மானத்தை எகிப்து செய்கையிற் கொண்டு வரவுமில்லை. ஐ. நா. வின் கண்ணியத்தைக் காப்பாற்றவும் இல்லை.

இசுரவேலுக்கும் எகிப்துக்கும் இடையே இரகசிய மன வேற்றுமைகள் இருக்கின்றன என்ற சந்தர்ப்பத்திலே எகிப்தை இசுரவேல் தாக்கியதை நோக்குமிடத்து இந்தப் போராட்டத்தை இவ்வளவில் நிறுத்திவிடுவது இந் நாடுகளுக்குச் சமாதானத்தை உண்டாக்கிவிடமுடியாது. சூவெசுக் கால்வாயில் இசுரவேலுக் குரிமை யில்லையா ...? என்ற பிணக்கும் உடனடியாகத்தீர்மானிக்கப்படல் வேண்டும்.

### பாகவதப் பிரசங்கம்

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் "பாகவதம்" என்னும் பொருள் பற்றி வெள்ளிக்கிழமை 9 - 11 - 56 தொடக்கம் 22-11-56 வியாழக்கிழமை வரையும் சென்னை சமஸ்கிருதப் பேராசிரியர் எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரி எம்; ஏ. அவர்கள் நாள் தோறும் மாலை 6-30 மணி தொடக்கம் சொற்பொழிவாற்றுவாரென ஷை சபைக் காரியதரிசி அறியத் தருகின்றார்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ் துர்முகி ஞூ ஐப்பசி மீ
உச உ வெள்ளிக்கிழமை


## உருசியாவின் உன்மத்தம்

எல்லையில்லாத இறுமாப்புக்கொண்டிருக்கும் வல்லரசுகளால் மாநிலத்துக்கும் மனித குலத்துக்கும் உண்டாகும் இடுக்கண் இவ்வளவு என்று எடுத்துக் கூற முடியாமலிருக்கின்றது. ஆங்கிலேய பிரான்சிய அட்டூழியங்களைப்பற்றி இதுவரை கண்டனஞ் செய்தோம். ஒருவகையில் எகிப்திலே குண்டுபோடும் குழப்பம் நின்றுவிட்டது. 'ஐக்கிய நாடுகள்' அமைப்பு அவ்விடத்தில் என்ன செய்வதற்கு எண்ணியிருக்கின்றதென்பதை உலகம் கவனித்து வருகின்றது. ஆகவே எகிப்திய நிலைமையைப்பற்றி மீண்டும் நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை.

ஆட்பலத்தால் ஆயுத அணிப் பெருமையினால் மிதமிஞ்சிய மதங்கொண்டிருக்கும் நாடுகளில் உருசியா உச்சியில் நிற்கின்றது. ஆசியா ஐரோப்பாக் கண்டங்களை அளாவிப் பரந்துள்ள உருசியநாடு அதற்கயலிலுள்ள தேசங்களைச் சேவகத் துறையிலமர்த்தி வணங்காமுடித் தனியரசு நடத்தத் துணிந்துவிட்டதென்பதை இப்பொழுது போலந்திலும் கங்கேரியிலும் பொதுவுடைமையென்ற கொள்கைப் போர்வையில் உருசியப் போர்ப்படைகள் நடத்திய அடாத்தான சம்பவங்கள் மறுபடியும் நிரூபித்துவிட்டன.

அமைச்சியல் ஆற்றலும் அறிவும் அநுபவமும் மிக்க நேருப்பெரியார் எகிப்து கங்கேரி இரு நாடுகளின் கவலைக்கிடமான நிலைமையைப்பற்றிக் கூறுமிடத்து "மனிதகுல மகத்துவமும் சுதந்திரமும் பலாத்காரஞ் செய்யப்பட்டதும் பொதுசனங்கள் புதுயுக ஆயுத வலிமையினால் அடக்கப்பெற்றதும் ஆன நாடுகள் இவை" என்று நுணுக்கமாகக் குறிப்பிட்டிருப்பதை அரசியல் வாதிகள் ஆராய்ந்து நோக்குவார்களேயானால் இங்கிலாந்து, பிரான்சு உருசியா ஆகும் இம்மூன்று வல்லரசுகளும் இயற்கைக்கு மாறான இராக்கத நாடுகள் என்று உண்மையை வெளியிடுவார்கள்.

உருசியாவின் உள்ளக்கிடக்கையென்ன? ஆயுதங்கொண்டு எந்த நாட்டிலும் பொதுவுடைமைக் கொள்கையை நிலை நாட்டுவதா? போலந்தில் யூகோசிலாவியாவிற் பொதுவுடைமைக் கொள்கை புதுமயமாக்கப் பெற்றிருப்பதின் அந்தரங்கத்தை ஆராய்ந்து பார்த்தால் உருசிய அரசியல் முறை முடிமன்னர் சிலரின் கொடுங்கோன்மையினின்றும் ஒருபடி பழுதுற்றதாகத்தோன்றுகின்றது. உருசிய நாட்டிலேயே எத்தனை தலைவர்கள் இருந்தாற்போலத் தலையிழந்தவர்களானார்கள். அத்தனை பேரும் செய்த குற்றம் என்ன? வெளியரங்கத்தில் அவர்கள் மேற் சுமத்தப்பெற்ற குற்றங்கள் குறைகள் விசாரிக்கப்பட்டனவா? சனநாயக முறையென்பது கனவிலும் இல்லாத நாடு ஒன்று இருக்குமேயானால் அது உருசியா என்பதற்கு ஐயமில்லை. தங்கள் தேசத்தில் உருசியர்கள் பழிபாவத்தை இயற்றுவதைப் பற்றி யார்தான் என்ன செய்தல் முடியும்? அயல் நாடுகளில் வேறு தேசங்களில் உருசியர்கள் அரசியல் நெறிமுறை கற்பிக்க விரைந்து செல்லுதல் வணங்காமுடித்தன்மையையும் இரணிய இறுமாப்பையும் காட்டுகின்றது. ஐக்கிய நாடுகள் என்று அழகாக அழைக்கப்படும் பொது அமைப்பு எதற்காக நிறுவப்பெற்றது. வணங்காமுடி நாடுகளையும் இரணிய இறுமாப்புக் கொண்ட தான்தோன்றிச் சர்வாதிகாரிகளையும் அடக்குவதற்கன்றோ? இந்த ஒழுக்க நெறியை எந்த விதத்திலும் அந்த ஐ. நா. கையாளாதுவிட்டால் உலகம் கலகமயமாகவே அலமர்ந்து ஈற்றில் நிலைகுலைந்துவிடும் என்பது நிச்சயம். ஆகவே கங்கேரி போலந்து முதலிய நாடுகளில் உருசியர் அரசியல் வியாபாரம் செய்வதையும் அக்காட்டு மக்களை அடிமைப்படுத்துவதையும் தடுக்க ஏனைய நாடுகள் இம்மியளவும் காலந்தாழ்த்தாது ஆவன செய்வதற்கு முற்படுதல் வேண்டும். இல்லையேல் வல்லவன் சொல்வதே நல்லதென்று உருசியாவுக்கு ஆதரவு கொடுப்பதாய் ஈற்றில் அகில உலகிற்கும் அல்லலாய் முடியும் என்பது திண்ணம்.

---

எகிப்தில் இங்கிலாந்து பிரான்சிய

# இசுரவேல் யுத்தம் நின்றுவிட்டது

—0—0—

## இன்னமும் பொருள் விலை ஏற்றமா

பொதுசனம் விரும்பியபடி
பாராளுமன்றத்து அங்கத்தவர் அமைவர்

அப்படியானால்

வியாபாரிகளும் பொதுசன விருப்பத்தின்படி
அமைய மாட்டார்களா?

பொதுசனங்களே விடைபகருங்கள்!

அதிக விலைகொடுத்து எதையும் வாங்காதீர்கள்!

பசி இருந்தாகிலும் வியாபாரிகளுக்கு
விட்டுக்கொடுக்காதீர்!

முக்கிய பொருட்கள் விலை கட்டுப்படுத்தப்பட்டன

---

அளவெட்டி
## அருணோதயக் கல்லூரியில் மெய்கண்டார் குருபூசை

மேற்படி குருபூசை 2-11-56 வெள்ளிக்கிழமை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் ஆசிரியர் திரு ச பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. மெய்கண்டதேவர் புராணம் படித்துப் பொருள் விரித்துரைக்கப்பட்டது. புராணபடனத்துறையில் சிறந்து விளங்குபவர்களாகிய திருவாளர்கள்: த. சரவணமுத்து, த. சண்முகம், க. பொன்னம்பலம் என்போர் புராணபடனத்திற் பங்குபற்றினர். பரமேஸ்வரக் கல்லூரி விஞ்ஞானப் பேராசிரியரும் சிவநெறிப் பெரியாரும் ஆகிய திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

---

# வாழ்க்கை வானில்

— வளர்நதி

### அவன் போகிறான் குடிகாரன் எனக்கு வார் … … …

கங்கேரியிலே உட்புகுந்து கலகம் விளைவிக்கும் உருசியாவின் யோக்கியதைபற்றி யோசித்துப் பார்த்தால் இந்த விதமாகக் கண்ணைக் கட்டி உலகத்தை ஏமாற்ற வேறெந்த நாடும் துணிந்ததில்லை யென்றே சொல்லுதல் வேண்டும். கங்கேரி ஒருநாடு, உருசியா இன்னொரு நாடு. கங்கேரியின் அரசாங்க ஏற்பாடுகள் சமூக வாழ்க்கை முறை இவற்றைத் தரப்படுத்துவது உருசியாவின் கடமையாம். அப்படியானால் இங்கிலாந்தும் பிரான்சும் ஏன் ஏகாதிபத்தியத்தை வளர்ப்பதற்காகப் புறநாடுகளில் ஆதிக்கஞ் செலுத்தப்படாது?

இங்கிலாந்தும் பிரான்சும் அத்துமீறி அடாத்துச் செய்த குற்றவாளிகள் என்று உலகம் தீர்மானித்துவிட்டது. இந்தத் தீர்மானத்தைக் கொணர்ந்த உலகத்தில் உருசியாவும் ஒரு அங்கம் வகிக்கின்றது. அதே உருசியா கங்கேரியைக் காலால் உதைத்து மானபங்கஞ் செய்கின்றது. அதோடு இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் புத்தியும் புகட்டுகின்றது. வெறிகொண்ட வல்லரசுகளின் ஒழுக்கம் மதுவுண்டு மயங்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

---

# இனவெறி இக்காலச் சமூகச் சீர்கேடு

## யாழ். இந்துக்கல்லூரிப் பழைய மாணக்கர் விருந்தில் திரு. C X மாட்டின் குறிப்பு

தமிழ் மொழியும் தமிழ் இனமும் தக்க உரிமையுடன் இதுவரை காலமும் திகழ்ந்து வந்தன. இப்பொழுது ஒரு மாறுதல் ஏற்பட்டது துக்ககரமான சம்பவம். இக்காலச் சமூகச் சீர்கேடுகளில் இனவெறியும் மதவெறியும் முக்கியமானவை என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணக்கர் சங்க ஆண்டுவிழாவிற் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றுச் சமூகமளித்த முன்னாள் பெரியகோட்டு நீதிபதி திரு. C. X. மாட்டின் குறிப்பிட்டார்.

மேலும் பேசும்பொழுது திரு மாட்டின் இந்துக் கல்லூரி போன்ற கல்வி நிலையங்கள் பழைய பண்பாட்டை நன்கு பாதுகாத்து வருகின்றன வென்றும், இந்துக்கல்லூரி இந்துசமய அரண் ஆக இருந்து தமிழினத்துக்கும் சால்புக்கும் முன்னேற்றத்திற்கும் ஏதுவாகத் தொண்டாற்றி வருகின்றதென்றும், இம்மகத்தான பாரம்பரியம் இவ்வாறே பிற்சந்ததிகளுக்கும் பரவிவருமென்று தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் கூறினர்.

விருந்துபசாரத்திற்குத் தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் திரு. வி. மு. ஆசைப்பிள்ளை அவர்கள் இக்காலத்துக் கல்வி முறையைப்பற்றியும் முறைகளைப் பற்றியும் எட்டுணையும் கல்விப் பண்பாடில்லாதவர்கள் அடிக்கடி பேசுவது வழக்கமாய் விட்டதாகையால் உண்மையான பொறுப்புள்ள கல்லூரித் தலைவர்கள் கல்வி சம்பந்தமான மாற்றங்களைப்பற்றிப் பேசுவது வில்லங்கமாய் விட்டதென்று சொல்லினர்.

யாழ்ப்பாணம் நீதிபதி திரு. ந. சிவஞானசுந்தரம் அவர்கள் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்களின் உன்னத நிலைமையும் தொண்டாற்றும் சிறப்பும் இக்கல்லூரியின் பெருமைக் கறிகுறி யென்று சொல்லி நாட்டின் பொருளாதார விருத்தியிலேயே சமூக சீர்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

---

இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை
# மாணவர் சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்வித்தியாசாலை மேல் வகுப்பு மாணவ மாணவிகள் நூறுபேர்வரையில் பூமிசாத்திர சரித்திர சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் உள்ள இடங்களைப் பார்ப்பதற்கு மேற்படி பாட ஆசிரியர்களின் தலைமையில் (7-11-56) காலை பிரார்த்தனை முடித்துக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினர்.

இவர்கள் முதலாவதாகச் 'சங்கிலித்தோப்பு' என்னும் யாழ்ப்பாணப் பழைய இராசதானியைப் பார்வையிட்டுச் சென்று செம்மணி உப்பு விளையுமிடத்தையும், கைதடியிலுள்ள வயோதிபர் நிலையத்தையும், செவிடர், குருடர் பாடசாலையையும் பார்வையிட்டனர் பின்னர் புத்தூரில் உள்ள "நிலாவரை" என்னும் வற்றா வாவியையும், பலாலி விமான நிலையத்தையும் பார்வையிட்டுச் சென்று தோலகட்டியிலுள்ள மௌன சபை மடத்தை அடைந்து அங்கு பழரச பானம் ஆக்கும் முறையைப் பார்த்தனர். அதன் பின்னர் காங்கேசன் துறையை யடைந்து, வெளிச்சவீடு, மின்சார நிலையம் சீமெந்துத் தொழிற்சாலையென்னும் இடங்களைப் பார்வையிட்டுக்கொண்டு கீரிமலையை யடைந்தனர். அங்கு பழைய மாணவர் ஒருவரால் பகற் போசனம் அன்புடன் வழங்கப்பட்டது. போசனத்தை முடித்துக்கொண்டு, கீரிமலை நீரூற்று, திருத்தம்பலேஸ்வரர் ஆலயம் என்பவற்றைப் பார்வையிட்டுப் பின் சுன்னாகத்துக்கூடாக யாழ் நகரை அடைந்து கோட்டை அலுப்பாந்தி, நூதனசாலை, முற்றவெளிப் பூந்தோட்டம், மணிக்கூட்டுக்கோபுரம் என்பனவற்றையும் பார்வையிட்டபின் பாடசாலையை யடைந்தனர் பார்வையிட்ட இடங்களிலெல்லாம் பூமிசாத்திர, சரித்திர பாட ஆசிரியர்களால் அவ்வவ் இடங்களின் பெருமை, தன்மை என்பனபற்றிச் சிற்றுரைகள் நிகழ்த்தப்பட்டன.

—:—

# நாட்டு முன்னேற்றத்துக்கு வழி காண்பதெப்படி?

## சர்வகலாசாலை மாணவருக்கு பண்டிதநேரு அறிவுரை

"கடினமான உழைப்பின் மூலமே நாடு முன்னேற முடியும்; நாடு முன்னேறுதற்குக் கடின உழைப்பைத் தவிர, வேறு வழி கிடையாது என்பதை மாணவர்கள் உணரவேண்டும். நாட்டை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், உலகம் மாறி வருவதையும் அமைதியான — கட்டுப்பாடான முறையில் மாணவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் கூச்சல் நமது சிக்கல்களைத் தீர்க்க முடியாது. ஏதோ பெரிய காரியத்தைச்சாதிப்பதாக பல சமயங்களில் மாணவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்வது எல்லாம் அற்ப காரியங்களே!

அரசியல், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு சிக்கலான விவகாரம். உள்ளத்தாலும் உடலாலும் மாணவர்கள், தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்; பல்கலைக் கழகத்தில் படிக்க வரும் தங்கள் பொன்னனநேரத்தை வீணாகச் செய்து விடக்கூடாது.

புத்தகங்கள் படித்தல், வகுப்புகளுக்குச் செல்லுதல். ஆகிய இவற்றுடன் நின்றுவிடாது மாணவர்கள்,நாட்டை எதிர் நோக்கியுள்ள சிக்கல்களையும், அவற்றைத் தீர்க்கும்முறைகளையும் குறித்து விவாதிக்க முயலவேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மாணவர்கள், நாட்டில் நடக்கும் முன்னேற்ற வேலைகளைப் பார்க்கவேண்டும். வெறும் கூச்சல் போட்டுவிட்டு, நாம் தைரியசாலிகள் என்று நினைப்பது அறிவீனம் என்று அலகபாத் சர்வகலாசாலை மாணவர் கூட்டத்தில் பண்டிதநேரு அவர்கள் பேசும்போது கூறினர்.

# அநீதியான சட்டம்

## சரித்திரத்தை மாற்றியமைக்கும் முயற்சி

தனிச்சிங்களச்சட்டம் தற்காலிகமானது. அது நிலைக்கப்போவதில்லை; நிலைக்கவும் முடியாது. அநீதியானதொன்ருயிருந்தபோதும் அதனால் நன்மையும் உண்டாயிருக்கின்றது. தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு ஆதியவற்றில் அக்கறையில்லாமலிருந்தவர்களே இவற்றில் இப்பொழுது பெரும் ஊக்கமெடுக்கின்ருர்கள். ஒரு விழிப்புணர்ச்சியை இச்சட்டம் உண்டாக்கியிருக்கின்றது.

தமிழ்மொழி இந்நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வந்திருக்கின்றது. விஜயன் வருகைக்கு முன்பே தமிழ்மொழி இலங்கையில் உன்னத நிலையிலிருந்திருக்கின்றது. பராக்கிரமபாகு பர்மாவுக்கு அனுப்பிய படைக்குத் தலைவனயிருந்தவன் ஒரு தமிழன். தனிச்சிங்கள மோகங் கொண்டவர்கள் சரித்திரத்தையே மாற்றி எழுத முனைந்து நிற்கின்றனர். மகாவம்சத்தில் சிங்களவரைப்பற்றிச் சொல்லப்பட்டவற்றைச் சரியெனக் கொண்டு தமிழரைப்பற்றிச் சொன்னவற்றைச் சரியல்லவென்று கூறி நாட்டின் பழைய சரித்திரத்தைத் தாம் விரும்பியவாறு மாற்றியெழுதுகின்றனர் இதை நாம் பலமாக எதிர்க்கவேண்டும்.

தமிழ் மொழியும் தமிழ்க் கலாசாரமும் பல்லாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தவை. அவை உலகெங்கும் பரவியிருந்தமைக்குப் பல சான்றுகளிருக்கின்றன. பௌத்த நாடாகிய சியாமில் முடிசூட்டு விழாவின்போது ஆசியுரைகள் இன்றைக்கும் தமிழிலேதான் கூறப்படுகின்றன இத்தகைய தொன்மையும் தெய்விகத் தன்மையும் வாய்ந்தமொழியைத் தனிச்சிங்களச் சட்டத்தால் அழிக்க முடியுமா? கிரேக்க உரோமானிய மொழிகள் போன்ற பெருமைபெற்றிருந்த பல மொழிகள் அழிந்தொழிந்துபோக அவை போன்ற பழமைவாய்ந்த தமிழ்மொழியும் தமிழ் நாகரிகமும் தனிச் சிறப்புடன் நிலைத்திருக்கின்றன தமிழ்மொழியின் தெய்விகத்தன்மைக்கு வேறு சான்று வேண்டுமா?

தமிழ் மொழிக்கு ஆபத்தேற்பட்டிருக்கும் இச்சமயத்தில் தமிழர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லையென்கிருர்கள் சிலர். இது சரியல்ல. ஒற்றுமை இன்மை தலைவர்களுக் கிடையிலேதான் உள்ளது. தமிழ்மொழியைப் பாதுகாப்பதில் முன் எப்பொழுதும் காணுத ஒற்றுமையை இன்று எங்கும் காண்கின்றேன். தமிழ மொழிக்குச் சம அந்தஸ்துக் கிடைக்கும் வரையும் தனிச்சிங்களச் சட்டத்தை ஒற்றுமையாய் நின்று எதிர்க்க வேண்டியது தமிழ்மக்களின் கடனுகும் என்று கொட்டாஞ்சேனை அர்ச் பெனடிக்ச் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கத்தின் வருடாந்த விழாவிலே சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பேசும்போது கூறினர்.

# பரசிவ விளக்கம்

—————0—————

## உலகும் உயிரும் தோன்றி ஒடுங்கும் முறை

திருமாலும் பன்றியாய்ச் செங்கணராச் சோதியாய் நின்றருளியும் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாதவர் பரமசிவனுர். அவர்உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும்காரண கர்த்தாவாக விளங்குகிருர், எப்படித்தோற்றிஒடுக்குவாரென்பதைச் சைவசித்தாந்த தாபனசாரியராகிய திருநந்திதேவர் தமது சிடராகிய திருமூலருக்கு

"பராபரமாகிய
பரமேஸ்வரன்
தராதலம் படைக்கத்
தானினைந்தருளி"

எனப்பகர்ந்தனர்.

பராபரத்திற்—பரந் தோன்றி, பரத்திற் சிவம் தோன்றி, சிவத்திற் சத்தி தோன்றி, சத்தியில் நாதம் தோன்றி, நாதத்தில் விந்து தோன்றி, விந்துவில் சதாசிவம் தோன்றி, சதாசிவத்தில் மகேஸ்வரம் தோன்றி, மகேஸ்வரத்தில் உருத்திரன் தோன்றி உருத்திரனில் விஷ்ணு தோன்றி, விஷ்ணுவில் பிரமா தோன்றி, பிரமாவில் ஆகாயம்தோன்றி, ஆகாயத்தில் வாயுதோன்றி, வாயுவில் அக்கினிதோன்றி, அக்கினியில் அப்புத்தோன்றி, அப்புவில் பிருதுவி தோன்றி, பிருதிவியில் அன்னம் தோன்றி, அன்னத்தின் கண்ணே நர மரமிருகபட்சி முதலிய தாவர சங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த் தோன்றியடையவே நர மிருக பட்சி தாவர முதலிய தாவர சங்கமாதிகள் அன்னச் சத்தியொடுங்கி, அன்னம் பிருதிவியிலொடுங்கி, பிருதிவி அப்புவிலொடுங்கி, அப்பு தேயுவிலொடுங்கி, தேயு வாயுவிலொடுங்கி, வாயு ஆகாசத்திலொடுங்கி, ஆகாசம் பிரமாவிலொடுங்கி, பிரமா விஷ்ணுவில் ஒடுங்கி, விஷ்ணு உருத்திரனில் ஒடுங்கி, உருத்திரன் மகேஸ்வரத்திலொடுங்கி, மகேஸ்வரம் சதாசிவத்திலொடுங்கி, சதாசிவம் விந்துவிலொடுங்கி, விந்து நாதத்திலொடுங்கி, நாதம் சத்தியிலொடுங்கி, சத்தி சிவத்திலொடுங்கி, சிவம் பரத்திலொடுங்கி, பரம் பராபரமாகிய பரமேசுவரனிடத்தி லொடுங்கும் எனக்காண்க!என சிவோற்பத்தி சிந்தமாமணி கூறுகிறது. எனவே சகல சீவராசிகள் மானிடர்; தேவர், விலங்கு முதலியவற்றின் தோற்ற ஒடுக்கத்திற்கும் சுத்தமாயையிற் றேன்றிய பஞ்ச கிருத்தியங்களுக்கும் காரணகர்த்தா சிவபெருமான் ஒருவரே தவிர வேறு ஒருவருமில்லை.

அசுத்தமாயைக் கிருத்தியங்கள் ஐந்தும் அனந்தேசுரர் செய்வார். பிரகிருதி ஐந்தும் அனந்தேசுரர்வாயிலாக ஸ்ரீகண்ட உருத்திரர் பிரமா விஷ்ணு உருத்திரர்கள் செய்வர். பரமேசுவரன் இறப்புப் பிறப்பில்லாதவர். அவர் நித்தியரும், சர்வஞ்ஞரும்' வியாபகரும், அனந்த கலியாணருமாய் உள்ளவர்; ஆதலால் அவர் எத்தொழிலைச் செய்யும் பொழுதும் அவர் ஒரு அவதார புருடராகப் பிறவி எடுக்க மாட்டார். பின் யார் அப்படிப் பிறவி எடுப்பார்களென்றல் எம்பரமேசுவரனுள் அடங்கி ஏகமாய் நிற்கும் ஞானிகளும் அடியவர்களுமே பிறந்து தொண்டாற்றுவார்கள். எனவே, திருமால், இந்திரன், பிரமன் உபமனியன் முதலானேரும் சிவனடியவர்கள் எனச் சைவ சித்தாந்தம் முரசறைகின்றது. இன்னும்,

"திருமாலிந்திரன் பிரமனுபமனி
யன்றபனலந்தி செல்வேளா
[தித்
தருமமுதுகுரவருக்குத் தனதருளா
லாசிரியத் தலைமை நல்கி
வருமெவற்கு முதற்குருவாய்
மெய்ஞானமுத்திரைக் கைம்மல
[ரும் வாய்ந்
வுருவழகுங் குறுநகையுங் காட்டி
யருள்தருஞ்சிவனையுளத்தில்
[வைப்பாம்!

என்னும் அருள் வாக்கும் நம் முன்னே காணப்படும் இவ்வுலகுக்கு ஒரு கர்த்தா உண்டு என்பதும் இவ்வுலகத்தின் தோற்றம், நிலை, ஒடுக்கம் ஆகிய இம் மூவகைத் தொழில், நிலையங்களில் ஒடுக்க நிலைக்குரிய மூலகாரணராயுள்ள சிவபெருமானே அக்கர்த்தாவென்பதும் துணியப்படும். அதுமட்டா இறைவன் சுவர்க்கம் முதல், பூதலம் ஈருக விளங்கும் ஆன்மாக்களாதிய பிரமா விஷ்ணு உருத்திரன் முதலியதேவர்கள் ஈருக உள்ள பிற உயிர்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் வருபவர். இதனைத் திருஞானசம்பந்தர் தாம் அருளிய தேவாரப் பதிகத்தில் திருவெழு கூற்றிருக்கையில்,

"ஒருருவாயினை மானுங்காரத்
தீரியல்பாயொரு விண்முதல்பூதல
மொன்றிய விரிசுடரும்பர்கள்
பிறவும்
படைத்தளித்தழிப்பமும் மூர்த்தி
களாயினை"

என்றும்,

இன்னும் சம்பந்த சுவாமிகள்திருக்கேதீச்சரத்தேவாரப் பதிகத்திலும்,

"பூவுளானுமப் பொருகடல்வண்
ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடி நின்னடியிணைகாண்
கிலாவித்தகமென்னுகும்"

என அருளுகிருர்கள். பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும் தேடித் தேவரீருடைய முடியையும் அடியையும் கண்டிலர். எனவே பிரம விஷ்ணுக்கள் பசு ஞானத்திற்குரியவர்களாவர். பதிஞானத்தைப் பெறவிரும்பும் மணிவாசகப்பெருமானும் "பிரம விஷ்ணு இந்திரன் முதலிய தேவர் பதவி வாழ்க்கையைத் தந்தாலும் ஏற்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# பேரின்ப நெறி

கடவுளே உண்மையான பொருள். அவரே எங்களுடைய மிக நெருங்கிய நண்பன். அவருடன் இடைவிடாது தொடர்பு வைப்பதால் நாம் அவருடன் ஒன்ருயிருப்பதை உணருகின்ரேம். நாங்கள் அவரில் வேறுபட்டவர்களாய்த் தொடங்குகின்ரேம். ஆனல் இறுதியில் அவருக்கும் எங்களுக்குமிடையில் உண்டாகும் பூரண ஐக்கியத்தினுல் இரண்டற்று ஒன்ருகி அவரேயாய் நிற்கின்ரேம்.

அவரைப் பிரிந்து நிற்கும் அளவுக்கு எங்களுக்கு பல இடைஞ்சல்களும் சலனங்களும் துன்பங்களும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆனல் உயிர் பந்தத்திலிருந்துவிடுபட்டுத் தனது இயற்கையான ஆன்மசக்தியையும் அருளையும் ஒளியையும் பெறும்பொழுது என்றும் நீங்காத பேரின்ப நிலையை அடைகின்றது. இப்படியாகும் பொழுது உயிரானது தனக்கு மாத்திரமன்றி மற்றவர்களுக்கும் ஒளி கொடுப்பதாகின்றது. இத்தகைய ஒளி உலகம் முழுதும் பரவுவதாக. மக்கள் யாவரும் அதைக் காண்பார்களாக. அதனல் அன்பும் சமாதானமும் உலகம் முழுதும் நிலவுவதாக.

— சுவாமி இராமதாசர்.

# திருக்குறளின்சிறப்புப்பற்றிச் சிங்களப்பெரியார் கருத்து

———0—0———

## தமிழுக்கு உரிய பெருமை 'சம உரிமை'

———0—0———

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி ஆசிரியர் வண. தர்மரத்தின தேரோ பி. ஏ. அவர்கள் கொழும்பு திருக்குறள் மகாநாட்டிலேபேசும்போது கொழும்பு திருக்குறள் மன்ற மூன்றாவது மகாநாட்டிற் கலந்து சொற்பொழிவாற்றும் பேறு சிங்கள மகனாகிய எனக்குக் கிடைத்ததையிட்டு மிகவும் வும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் வித்துவான்களும், புலவர்களும், அறிஞர்களும் குழுமியுள்ள இச்சபையில் பேசுவதில் மகிழ்ச்சி உண்டாகிறது. தமிழ் மொழியில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு அளவற்ற மதிப்பும் பக்தியும் உண்டோ அதே அளவு மதிப்பும் பக்தியும் எனக்கும் உண்டு. சிங்கள மொழியில் எனக்கு எவ்வளவு பற்றுதல் இருக்கிறதோ அதே அளவு பற்றுதல் தமிழ்மொழி இடத்திலும் எனக்கு இருக்கிறது. தமிழ் மொழியின் சிறப்பும் பெருமையுமே இதற்குக் காரணமாகும். தமிழ்மொழியின் உயர்வைச் சிறிதாயினும் அறிந்தவர்கள் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்தை இந்நாட்டிற் கொடுக்க ஒரு போதும் பின்னிற்க மாட்டார்கள்.

வள்ளுவரும் புத்தரும் என்ற விஷயத்திற்கு நாம் வரும்போது புத்தருடைய தர்ம உபதேசங்களுக்கும் வள்ளுவருடைய தர்ம உபதேசங்களுக்கும் இடையில் அதிக அளவில் ஒற்றுமை இருப்பதைக் காணமுடியும். புத்தர்பிரானுடைய கொள்கைகள் உபதேசங்கள் அனைத்தும் திருக்குறளிலும் காணப்படுகின்றன. திருவள்ளுவர் புத்த சமயத்தை நன்கு அறிந்திருந்தார் என்பதற்குப் பல சான்றுகள் குறளில் உள்ளன. திருக்குறள் தமிழ் மக்களுக்குச் சிறப்பாக உரியதாயினும் அது உலக மக்களுக்கெல்லாம் உரிய ஒரு பொது நூலாகும் என்று கூறினார்.

இன்று தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் இன்னல் வந்துள்ள தென்றால் அதற்குக் காரணம் யார்? 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது பொய்யாகாது. தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் வந்த இன்னல் தமிழர் தங்கள் இலட்சியங்களை மறந்ததால் வந்ததென்பதைப் பெரும்பான்மையான தமிழர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டு மென்பது எனது கருத்து.

எந்த நாட்டினரும், எம்மதத்தினரும் எந்த இனத்தவரும் அறிந்து ஒழுக வேண்டிய குறளை முதலிற் படித்து, உணர்ந்து நடக்க வேண்டியவன் தமிழன். பிறருக்குக் குறளின் பெருமையைக் காட்டி விட்டுச் சும்மா இருந்தால் எம்மை எதிர்நோக்கிக்கொண் டிருக்கும் பயங்கரமான நிலையிலிருந்து தப்பிக்கொள்ள முடியாது என்று கொழும்பிலே திருக்குறள் மகாநாட்டைத் தொடங்கி வைக்கும் போது கூறினார் சேர். கந்தையா வைத்தியநாதன்.


### அடைவு நகைகள் வெந்தீஸ் விற்பனை

**தா. சி. குமாரசாமி &**
**ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம்**
576/6 அம்மன்கோவில் ரோட்
கலட்டி
யாழ்ப்பாணம்

மேற்படியாரின் அடைவு கடையில் 1955-ம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1955-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1956-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

போ. இராசரத்தினம்
கொம்மிஷனர்
M, 397 2-11, 9-11


### உணவு மந்திரியின் உள்ளக் கிடக்கை

தனிச்சிங்களச் சட்டத்துக்கு இப்பொழுதிருந்து வரும் எதிர்ப்பு நாளடைவிற் குறைந்துவிடும் என்பதிற் சந்தேகமில்லை என்றும் பிரதம மந்திரி பயமுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டாரென்றும் வேண்டுமானால் கடுமையான நடவடிக்கையெடுக்க அவர் தயங்கவும்மாட்டார்என்றுங் கூறினாராம் மொறட்டுவவில் ஒரு பொதுக்கூட்டத்திற் பேசும்போது உணவுமந்திரி ஸ்ரீ பிலிப்பு குணவர்த்தன

# எகிப்து யுத்தம்

———0———

## நிகழ்ச்சிகளும் உலகக் கருத்தும்

### ஐ. நா. சபையில் யுத்த எதிர்ப்புப் பிரேரணை

எகிப்தியநாட்டுக்குட் புகுந்து இசுரவேலுடன் பிருத்தானியாவும் பிரான்சும் சேர்ந்து எகிப்தைத் தாக்குதல் உடனே நிறுத்தப் படவேண்டுமென்று ஐக்கியநாட்டுச் சபையில் அமெரிக்கா ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தது. ஐந்து நாடுகள் எதிர்க்க 64 நாடுகள் சாதகமாக வாக்களித்துப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. 6 நாடுகள் வாக்களிக்கவில்லை. இந்திய பிரதிநிதியுடன் பிற பல நாட்டுப் பிரதிநிதிகள் யுத்தத்தைவன்மையாகக் கண்டித்தார்கள்.

### ஆபிரிக்க ஆசிய மன நிலைமை

எகிப்தில் நடக்கும் யுத்தத்தைப்பற்றி எவ்வித பிரேரணையை ஐக்கியநாட்டுப் பொதுச் சபையிற் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுபற்றி ஆபிரிக்க ஆசிய நாட்டுப் பிரதிநிதிகள் இந்தோநேசிய பிரதிநிதி கலாநிதி சுத்ஜறவோ அவர்கள் தலைமையிற்கூடி ஆலோசித்தபொழுது இசுரவேல், பிரான்சு, பிரித்தானிய ஆகிய மூன்று நாடுகளின் செயலைக்கண்டித்து அந்நாட்டுப் படைகள் உடனே யுத்த நிறுத்தப் செய்து எகிப்தை விட்டு வெளியேறுவதே ஐக்கிய நாட்டுச்சபை முறைக்கு ஏற்றதாகும். என்று தீர்மானித்தனர்.

### இந்திய பாக்கிஸ்தான் கருத்து

பண்டித நேரு அவர்கள் அலகபாத்திலே பேசும்போது யுத்தத்தைக் கண்டித்து தனது மனவருத்தத்தையும் எகிப்தின் மீதுள்ள அனுதாபத்தையும் தெரிவித்தார்.

பாக்கிஸ்தான் முதல் மந்திரி ஸ்ரீ சுகிர்தவதி எகிப்தைத் தாக்குவது பற்றி ஆவேசத்துடன் கண்டித்து யுத்த நிறுத்தம் உடனே செய்யப்படுதல் வேண்டும். அல்லது உலக நாடுகள் ஒன்றுகூடி பிருத்தானிய பிரான்சு இசுரவேலை எதிர்ப்பதே முறையாகு மென்றார்.

### சமராச்சியம் சின்னபின்னப்படுமா

எகிப்தின்மீது நடத்தும் யுத்தத்துடன் பிறபல காரணங்களால் பிருத்தானிய சமராச்சியக் குழுவைவிட்டு இந்திய நீங்க வேண்டிய நிலைமை உண்டாகின்றதென்று பிருத்தானிய முதல்மந்திரிக்கு இந்திய முதல்மந்திரி எழுதி எச்சரிக்கை செய்திருக்கின்றாராம். பிருத்தானிய சமராச்சியக் குழுவை விட்டு இந்தியா நீங்குவதானால் இலங்கையும் பின் தொடருமென்றும், பாக்கிஸ்தானும் அப்படியே செய்யவேண்டி வருமென்றும் குறிப்பிடப் படுகின்றது.

### பத்திரிகை நிருபர்களுடன் பழைய முதல்மந்திரியின் கருத்து

பிருத்தானியாவின் பழைய தொழிற்கட்சி அரசாங்க முதல்மந்திரி அட்லி பிரபு தெல்கிமாநகரிலே பத்திரிகை நிருபர்களுடன் பேசும்போது 'பிருத்தானிய பிரான்சுச் செயல் பிழையானதும் புத்தியீனமானதுமாகும் என்று கண்டித்தார்.

### மற்றொரு யுத்தம்

எகிப்துநாட்டில் ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்க ஹங்கேரியில் மற்றொன்று நடக்கின்றதாம். அங்கே உருசிய படைகளின் தாக்குதல் மிக வேகமாக நடைபெறுவதாகக் குறிப்பிடப் படுகின்றது. அந் நாட்டு முதல் மந்திரி சிறைக்காளாக மற்றொரு அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள தென்றும் அறிய வருகின்றது.

### ஈடனது மறுப்பும் அவருக்கு எதிர்ப்பும்

ஐக்கிய நாட்டுச் சபைத் தீர்மானத்தின்படி யுத்த நிறுத்தம் செய்யப் பிருத்தானிய முதல் மந்திரி ஸ்ரீ அந்தொனி ஈடின் மறுத்து விட்டார். நிலைமையைத் தாம் முழுதாய் ஆராய வேண்டும் என்பது அவர் கூறும் காரணம். இது இப்படியிருக்க அவரைப் பதவியிலிருந்து நீக்க அவருடைய கட்சிக்குள்ளேயே செயலாற்றப்படுகின்றதாம். அல்திரிங்காம் பிரபு என்பவர் அத்துறையில் ஈடுபட்டிருக்கின்றாரெனக் கூறப்படுகின்றது. "இகொனெமிஸ்ற்" என்னும் பிரித்தானிய பொருளாதாரத் துறைப்பத்திரிகை ஈடனது செயல் ஈடனது பதவிக்கும் அவருடைய அரசாங்கத்துக்கும் நாட்டின் நல்ல பெயருக்கும் இழுக்கைக் கொண்டு வந்திருக்கின்றதென்று குறிப்பிட்டுக் கண்டிக்கின்றது, பிற பத்திரிகைகளும் ஈடினது செயலைக் கண்டிக்கின்றன.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### அரசாங்க தனுதிகாரப் பகுதிக்குக் கண்காதில்லை

— தகநாயக

இந்தத் தீவிலே ஒரு நூதனமான மிருகமிருக்கின்றது. அது அரசாங்க தனுதிகாரிப் பகுதி என்றழைக்கப்படுவது. அதற்குக் கண்கள் காதுகளில்லை. மக்களின் மந்திரிகளுடைய கருத்துக்கு எதிராய்ச் செய்வதேயாகும் என்று அரசாங்க தனுதிகாரப் பகுதியை பௌத்த கலைக்குழுக் கூட்டமொன்றிற் கல்வி மந்திரி ஸ்ரீ தகநாயகபேசும்போது கண்டித்தார்.


# கம்பராமாயணம்

( யுத்தகாண்டம் )

### கும்பகருணன் வதைப்படலம்

( ஒன்று முதல் 170 பாட்டுக்கள் )

— யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு —

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனார் அவர்கள்** எழுதிய
விளக்கவுரையுடன் வெளிவந்துவிட்டது

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
வேலணை மேற்கு செல்லமுத்து
நமசிவாயம் —வழக்காளி.
இல. 12113

எதிராக

1 சரவணை தற்போது யாழ்ப்பாணம் மறியல்வீடு பொன்னம்பலம் வெற்றிவேலு,
மயினர் 2. ஷையூர் வெற்றிவேலு கந்தமூர்த்தி
3. ஷையூர் செல்லையா கைம்பெண் இராசம்மா.

1ம் எதிராளி தனது காலஞ்சென்ற பெண்சாதி மகேஸ்வரியின் ஆதனங்களின் பராபரிப்புக்காரனாகவும் — 3ம் எதிராளி இரண்டாம் எதிராளியின் பராபரிப்புக்காரியாகவும்.

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 12113ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள் 1956ஞு மார்கழி மீ 1ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2276/25ம் ரூபா 1500/- க்கு 2-12-54 தொடக்கம் 15-2-55 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 266-87 சதம்.

காணிவிபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை "சிமா நா குட்டி சிமா விளாப்பு வயலும் மறு பிரிவுகளும் பர. செ. இல. முப்பது (பர செ இல 30) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு செல்லையா கைம்பெண் இராசம்மாவிற்குரிய வாதனம். வடக்கு தியாகராசா பெண் மனோன்மணிக் குரியவாதனம். மேற்கு கணபதி நாகனுதனுக்கும் பொன்னுத்துரை பெண் இராசம்மாவின் உரித்தாளர்கட்குமுரியவாதனங்கள். தெற்கு பொன்னுத்துரை பெண் இராசம்மாவின் உரித்தாளர்கட்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள். இதடங்கலும்.

(2) ஷை சரவணையிறை "கடப்படி மயிலப்புலத்தில் கிளக்குப் பக்கம்" பர. நீ. இல ஐந்து (பர. நீ. இல. 5) கிணறும் வேறு காணியில் இருக்கும் கிணற்றுப் பாகமும் எல்லை கிழக்கு கந்தன் பொன்னனுக்குரிய வாதனம். வடக்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்திற்குரிய வாதனம். மேற்கு மாணிக்கம் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். தெற்கு கார்த்திகேசு நாகனுதிக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள். இதடங்கலிற் சொரியலாயரைவாசி.

(3) ஷை சரவணையிறை "சோற்றசங்குதறை" பர செ. இல. மூன்று குளி இரண்டரை (பர. நீ. இல 3 குளி $2\frac{1}{2}$) வீடும். குசினியும் கிணறும் எல்லை கிழக்கு ஏரம்பு பெண் தங்கத்திற்குரிய வாதனம், வடக்கு சதாசிவம் பெண் பாக்கியலட்சுமிக்குரியவாதனம். மேற்கு ரேட்டு தெற்கு தம்பையாபிள்ளை பெண் தங்கம்மாவிற்குரியவாதனம் இதடங்கலும் ஆனல் கிழக்குப் பக்கத்தில் இருக்கும் குசினி பிறநீங்கலாக

(4) ஷை வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை "சிலுந்தாவில்கலடு" பர. செ இல ஆறு குளி ஏழு (பர செ இல 6, குளி 7) எல்லை கிழக்கு நாகன் கணபதிக்கும் கார்த்திகேசு பெண் பாக்கியலட்சுமிக்குமுரியவாதனம், வடக்கும் மேற்கும் கணபதிப்பிள்ளை பெண் மாணிக்கத்திற்குரிய வாதனம், தெற்கு சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கு பொன்னம்பலம் பெண் நகுலாம்பிகைக்குமுரிய வாதனங்கள் இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

காரைநகர்,
1956-ம்ஞு ஐப்பசிமீ 6 உ,
M. 401 9-11-56 (து. 300)



## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11528
1. அய்யாத்துரை சிவபாதமும் பெண்
2. அன்னபூரணம். —சுதுமலை.
—வழக்காளிகள்.

எதிர்

1. நமசிவாயம் சோமசுந்தரம் கொக்குவில் - தற்போது டன்சுவண்டுதோட்டம் எற்றம்பிற்றியா
2. சோமசுந்தரம் பெண் ஞானசுந்தரி. டேசன் ரேட்டு கொக்குவில்,
3. சின்னத்தம்பி சண்முகநாதனும் பெண்
4 அன்னபூரணம்.
கொக்குவில் மேற்கு.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11528ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1956ஞு மார்கழிமீ 22ம்உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்த அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

முதலாம் இரண்டாம் எதிரிகள் இரண்டாம் வழக்காளிக்கு கொடுக்கவேண்டிய பணத்தொகை.

தீர்வை ரூபாய் 6574/= பின் ரூபாய் 6000/— க்கு 18-8-54 தொடக்கம் 20-11-54 வரை நூற்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின் மொத்த தொகைக்கு 5 வீத வட்டியும் பணம்கொடுக்கு வரைக்கும் கோட்டுச் செலவு ரூபா 205,80.

கொடுபட்ட பணத்தொகை ரூபா 2075/—

காணி விபரம்

(1) யாழ்ப்பாணம் கொக்குவிலில் சட்டைகளட்டியும் கறுவலடியும் இருபிரிவுகள் நீ. இ. $6\frac{1}{2}$ சட்டைகளட்டி நீ இ. 6 கறுவலடி நீ இ $\frac{1}{2}$. கல்வீடும் வான்பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு கை ஒழுங்கை. வடக்கு ஈட்டுக்காறரும், தில்லையம்பலம் செல்லத்துரை பெண் ஞானபூரணம்.

மேற்கு ஈட்டுக்காறரும் அண்டர்லூட் குரசம் செல்லத்துரை பெண் அன்னபூரணமும்.

தெற்கு ரேட்டும் ரேட்டுக்குப் போகும் கைஒழுங்கை முகப்பும்வேலுப்பிள்ளை சிற்றம்பலமும்

(2) யாழ்ப்பாணம் கொக்குவிலில் சட்டைகளட்டி எனப்படும் ஒரு கைஒழுங்கை குளி எட்டு (8)

எல்லை கிழக்கு கைஒழுங்கை, பஞ்சாட்சரம்பெண்காகாரதினம்.

வடக்கு முதலாம் காணிக்குச் சொல்லப்பட்ட எல்லை,

மேற்கு வேலுப்பிள்ளை சிற்றம்பலம்,

தெற்கு ரேட்டுக்குப் போகும் கை ஒழுங்கை முகப்பும், முதலாம் காணிக்குரிய கைஒழுங்கை பாவிப்பு உருத்தும்.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
1-11-56.
M, 400 9-11-56 (து. 100)


## வாழ்க்கை வானில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கியவர்கள் ஒருவரை ஒருவர் குடிகாரன் என்று வசைபாடுவதை ஒக்கின்றது.

**சுதந்திரம் என்ற சொல்லுக்குப் பூரண விளக்கம் இல்லையா?**

ஐ நா. என்ற உலகஅமைப்பிலே அரசியல் வேதாந்தப் அடிக்கடி பேசுகின்றார்களே. சுதந்திரம் என்றால் என்ன. ஒருநாட்டின் சுதந்திரத்தை இன்னெரு நாடு பாதித்தால் அவ்வித குற்றஞ் செய்யும் நாடு ஐ. நா. வில் இடம்பெற முடியுமா? என்று இதுவரையும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை அழுத்தந் திருத்தமாய் நடைமுறையிற் கொண்டுவர வில்லை இந்த ஐ நா.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் சுதந்திர நாடுகளா? அவ்வாறயின் ஆங்கு உருசிய நாட்டாண்மை தான் டவமாடுவது பொருத்தமாகுமா? மொரொக்கோ, சிங்கப்பூர், கோவா முதலிய இடங்களில் பிரான்சு இங்கிலாந்து, போர்த்துக்கல், எவ்வாறு ஆதிக்கம் செலுத்தலாம். அடிப்படையிலே சுதந்திரம் என்பது வல்லரசுகளின் வல்லமைக்கும் வாயாடித்தனத்துக்கும் அமைந்ததான அரசியல் நிலைமையாய் வழங்கிவரும் வரைக்கும் உலகிலே சமாதானம் எங்கேயிருக்கும்? நல்லவர் பொல்லாதவர் என்று யார் யாரைச் சுட்டிக்காட்டலாம்?

# கடவுளிடம் நம்பிக்கை வைத்துக் கடமையைச் செய்யுங்கள்

## கல்லூரி மாணக்கர்களுக்கு Sir. வை. துரைசுவாமி அவர்கள் மதிமொழி

உங்கள் எல்லோருடைய பொறுப்புக்களும் மகத்தானவை. அவற்றை விட்டு ஓடமுடியாது. கடவுளிடம் நம்பிக்கை வைத்து எல்லோரும் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். அதற்கான வழிவகைகளைப் பெற்றோரிடமும், குருமாரிடமும். மூத்தோரிடமுமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு Sir வைத்திலிங்கம்துரைசுவாமி அவர்கள் கொக்குவில் இந்து கல்லூரி உயர்தர மாணக்கர் ஆண்டுவிழாவிற் சொற்பொழிவாற்றும் பொழுது நன்னெறி புகட்டினர்.

தொடர்ந்து பேசும் பொழுது Sir. துரைசுவாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:

"நீங்கள் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாகவோ பலவீனமுற்று விட்டதாகவோ கருதவேண்டாம். உங்கள் சொந்த முயற்சியினுலேதான் நீங்கள் இவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறீர்கள். யாவும் உங்கள்மீதே தங்கியுள்ளன. ஆகையினுல் நீங்கள் ஒவ்வொருவரும் மதித்து நேசிக்கப்படும் வகையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்காக, உங்கள் சமுகத்திற்காக நாட்டுக்காக நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும்".

கல்லூரித் தலைவர் திரு பேரின்பநாயகம் மொழிப் பிணக்கைப்பற்றிக் குறிப்பிட்டபொழுது பிரதமர் பண்டாரநாயகவின் மொழி நடவடிக்கை பலவேறு மொழிகள் பேசும் மக்கள் வாழும் ஒரு நாட்டின் வரலாற்றிலே எங்கேயாவது காணக்கிடைக்காததென்றுகூறி இந்தப் பிணக்கு ஒருசாரார் சிறிது விட்டுக்கொடுத்துச் சமரசங் காணக்கூடிய தொன்றன்றென்று எடுத்துக் காட்டினர்.

—

## இனவெறி
### இக்காலச் சமுகச் சீர்கேடு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

திருத்தவாதிகள் கவனம் எடுத்தல் வேண்டும் என எடுத்துக்காட்டினர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தலைவர் இக்கால நிலைமைபற்றி நம்பிக்கையிழக்கப்பட்டதென்றும் தமிழர்கள் நாட்டின் விருத்திக்குழைத்து வந்தவர்களாகையால் இந்தக் காரிருள் முகிற்கூட்டம் குலைந்துபோகப் பின்னரும் உரிய உரிமை பெறுவது நிச்சயம் எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்க மேற்சபை அங்கத்தவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் பேசும்போது இலங்கைத் தமிழரின் நிலையிலும் பார்க்க இன்று இலங்கை இந்தியத் தமிழரின் நிலைமை மிக மேலானதாயிருக்கின்றது. இந்நாட்டில் தமிழ்மொழி ஓர் அன்னியமொழியாகக் கருதப்பட்டிருப்பதோடு தமிழ் மக்களும் நாடற்றவர்களாக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறினர்.

## பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் பொற்கிழிவிழா வரவேற்புரை

இன்று நாங்கள் உடுவில் தமிழ்ப்புலவர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலுமாக நமது தமிழ் நாட்டிலே சென்ற 50 ஆண்டுகள் வரையும் புரிந்து வந்த அரிய தமிழ்மொழித் தொண்டைப் பாராட்டி அவர்களுக்கு ஒரு பொற்கிழி வழங்கவும் அவர்களுடைய 75 வது ஆண்டு ஆரம்பத்தைக் கொண்டாடவும் இம் மண்டபத்தில் கூடியிருக்கின்றோம். அவர்களுக்குச் செய்யும் சிறப்புத் தமிழ்மொழிக்குச் செய்யுஞ் சிறப்பாகும்.

தமிழ்மொழி உலகிலுள்ள மொழிகளுக்குள் மிகவும் புராதனமானது. சிவபெருமானும் முருகப்பெருமானும் வளர்க்கப்பட்டது. சிவபெருமான் தமிழ்மொழிக்கு இலக்கணம் அகத்திய முனிவருக்கு அருளிச்செய்ய அவ்வகத்திய முனிவர் அகத்தியம் என்னும் இலக்கண நூலை அருளிச் செய்தார். அகத்திய முனிவருக்குச் சிவபெருமானையன்றி முருகக்கடவுளும் தமிழைச் செவியறிவுறுத்தருளினர். அவ்வகத்திய முனிவருக்கு மாணக்கர் பன்னிருவர். அகத்தியமுனிவர் தாம் செய்த அகத்தியத்தை அப் பன்னிரண்டு மாணக்கர்களுக்கும் கற்பித்தருளினர். அப்பன்னிருவர்களும் அவ் வகத்தியத்தை முதனூலாகக் கொண்டு தனித்தனியே வழிநூல்கள்செய்தார்கள். அவைகளுக்குள்ளே சமதக்கினி முனிவருடைய புத்திரரும் திரணதூமாக்கினியென்னும் பெயரையுடையவருமாகிய தொல்காப்பியமுனிவர்செய்த தொல்காப்பிய மென்னும் நூலை மிகச் சிறந்ததாகும். இவ்விதமான இலக்கண நூல்கள் தோன்றியமையினுல் தமிழ்மொழிக்கு உலகில் எம்மொழிக்குமில்லாத இலக்கண வரப்புகளுண்டு தமிழ்மொழியை முச்சங்கங்கள் வளர்த்தன. பிற்காலத்தில் சேர சோழ பாண்டியர்கள் கண்போற் காப்பாற்றி வந்தனர். தமிழ்மொழியின் வளம் மிகப் பெரியது. முப்பால் நூலெனக் கூறப்படும் திருக்குறள் ஐம் பெருங்காப்பியங்கள், சைவசமய நாயன்மார்களால் பாடப்பட்ட திருமுறைகள் ஆழ்வார்களாற் பாடப்பட்ட திருவாய் மொழி முதலிய பிரபந்தங்கள் புராணங்கள் இன்னும் அநேக நூல்கள் தமிழ்மொழியில் உள்ளன. கிறிஸ்தவர்களும் முகமதியர்களும தமிழ் மொழியைப் பயின்று சிறந்த இலக்கியங்கள் செய்திருக்கின்றார்கள். தமிழ்மொழி வழங்கும் நிலம் பரதகண்டத்தின்கண்ணே திருவேங்கடத்துக்குத் தெற்கிலுள்ள பிரதேசமும் ஈழநாட்டில் வடக்குக் கிழக்குப் பாகங்களுமாகும்.

(வளரும்)




## வட்டக்கொடை
# தமிழ் முன்னேற்றச் சங்கம்

மேற்படி சங்க ஆரம்ப விழா 1-11-56 மாலை வட்டக்கொடைச் சரஸ்வதி கல்லூரி மண்டபத்தில் திரு டி. ஆர். டொனல் அவர்களின் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. அவ்வமயம் திரு. அ. சபாபதிப் பிள்ளை அவர்கள் மக்களை வரவேற்றுப் பேசும்போது சரித்திர காலத்திற்கும் அப்பாற்பட்ட காலத்தில் இராவணன் இலங்கையை ஆண்டான். மலை நாட்டிலேயே சீதாபிராட்டியைச் சிறை வைத்தான். அந்த இடம் தான் இன்று 'சீதா எலியா' என்று அழைக்கப்படுகிறது. ஆகையால் இலங்கேசன் தலைநகர் இவ்விடத்திலேயே இருந்திருக்க வேண்டும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநீற்றுப் பதிகத்திலே "இராவணன் மேலது நீறு" என்று பாடியுள்ளார். இதனால் இராவணன் "சைவத்தையும் தமிழையும்" எவ்வாறு வளர்த்தான் என்பது நன்கு புலப்படுகிறது. ஆகவே இந்தத் தீபாவலித் திருநாளிலே வட்டக்கொடைப் பகுதித் தமிழ் மக்கள் தமிழ் முன்னேற்றச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டு செய்வது சாலச் சிறந்தது. இச்சங்கம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாகவும் வளர்வதற்கு எல்லாருடைய ஒற்றுமையையும் வேண்டிக் கொள்ளுகிறேன் என்றார்.

திரு என். எஸ். சிவரத்தினம் அவர்கள் கூட்டுப் பிரார்த்தனையின் அவசியத்தை விளக்கினார்.

திரு. எஸ். மார்க்கண்டு அவர்களும் மற்றும் பலரும் பேசியபின் சங்க உத்தியோகத்தர் தெரிவுகள் நடைபெற்றது. திரு. எல். றெங்கராஸ் தலைவராகவும், திருவாளர்கள் ரி. தம்பிநாயகம், சி. வி, வேலுப்பிள்ளை, ரி. இராமஜெயம், டி. ஆர். டொனல், ஏ. சபாபதிப் பிள்ளை ஆதியோர் உபதலைவர்களாகவும், திருவாளர் ஏ. எஸ். ஊர்துசாமி, வி. சிவலிங்கம் இருவரும் இணைக் காரியதரிசிகளாகவும், திரு. எஸ். இராசநாயகம் தனாதிகாரியாகவும்; திரு. பி. குமாரசாமி உபதனாதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக இன்னும் பதினேழுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஸ். பொன்னம்பலம் நன்றியுரை கூறியதும்கூட்டம்முடிபெய்தியது.

## பர சிவ விளக்கம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இக்காலத்தில் அரசியல் பதவியை விரும்பும் கட்சியாளருக்கு மணிவாசகர் துறவு பேரறிவைப் போதிப்பதாகும்.

இக்காலத்துச் சமரசவாதிகள் சுவாநுபூதி யடையாது பேர் புகழுக்காக எல்லா மார்க்கங்களையும் ஒன்றெனத் திரிவுபடுத்திக் குழறுபடை செய்து மயங்க வைக்கிறார்கள். பரமேஸ்வரன் எல்லாப் பொருள்களுள்ளும் கலந்திருக்கிறார். அவர் கருணை வடிவாக உள்ளவர். சிவன் முக்தரான புக்திமான்களுக்கு எல்லா இடமும் சிவமயமாகவே காணப்படும். அஃதில்லாதோர் மூர்த்தி பேதங்களினால் வித்தியாசப்படுவார்கள். யாம் எத்தெய்வத்தை வணங்கினாலும் அங்குத் தோன்றியருளுவது மாதொருபாகனார் ஆகும். சைவசித்தாந்த சமயத்துக்கு எச்சமயமும் சம்மதம். அது புறச்சமயத்தவர்களை வலிந்திழுக்காது. அவ்வச் சமயத்துக்கும் அவ்வவர் பொருளாய் நின்று அருள் சுரப்பர். சைவசித்தாந்தமும் வேதாந்தமும் கடந்த நாதாந்த வடிவினனாகியவர் பரமசிவனார். அவருக்குச் சமானம் பேசுவது சரியல்ல.

# தேவார திருவாசகப் பரிசுகள்

—:o:—

அகத்தியர் தேவாரத்திரட்டிலுள்ள தேவாரங்கள் முழுவதையும், திருவாசகம் முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்கு, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் ஷை சபை நாவலர் மண்டபத்தில் தனித்தனி தேர்தல் நடத்திக் கீழே காட்டப்பட்ட பிரகாரம் பரிசில்கள் வழங்கப்படும்.

**அகத்தியர் தேவாரத் திரட்டு முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்குக் கோடுக்கப்படும் பரிசில்கள்.**

1. அகத்தியர் தேவாரத் திரட்டு (சதாசிவச் செட்டியார் உரையுடன்)
2. திருவாசகம் (கா. சுப்பிரமணியபிள்ளை உரையுடன்)
3. பணம் ரூபா. 10.

**திருவாசகம் முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்குக் கோடுக்கப்படும் பரிசில்கள்.**

1. திருவாசகம் நான்ககவல் (மறைமலையடிகள் உரையுடன்)
2. திருச்சதகம் (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
3. நீத்தல் விண்ணப்பம் (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
4. திருவெம்பாவை (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
5. திருவாசகம் (தருமபுர வாதீனப் பதிப்பு)
6. பணம் ரூபா. 20

பரீட்சை பள்ளிக்கூடங்களின் அடுத்த இந்து மதப் புதுவருட விடுமுறை நாட்களில் நடைபெறும் பரீட்சையிற் பங்குபற்ற விரும்புபவர்கள் அடுத்த கைமாதம் முடியுமுன் தங்கள் மனுப்பத்திரங்களைச் சமயப்பிரசார அமைச்சர் சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம என்ற விலாசத்துக்கு அனுப்புக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்
9-10-56.

M 375 12-10 (த. 150)


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 11—11—56 —— 17—11—56. ]

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

நீர் இந்தவாரம் சண்டைதொடுக்கமுந்துவீர். கருமங்கள் ஒழுங்குபண்ணப்படாமலிருக்கும். உமக்கு மனச்சமாதானமுமிருக்கமாட்டாது வழக்குகள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

தனலாபம் நிச்சயம். சிலபிழை எண்ணங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது. உம்முடைய கந்தோரில் உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும். குடும்ப நிலைமை சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

இந்தவாரம்நிலைமைகள் திருந்த வேண்டும். வியாழக்கிழமையின் பின் உம்முடைய கருமங்கள் பலவற்றில் நீர் மிகுந்ததிருத்தத்தைக் காண்பீர். இடைஞ்சல்கள் நீக்கப்படும் உமக்குக்கூடுதலான மனச்சமாதானமிருக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

இந்த வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. பண நட்டத்துக்கும் நண்பருடன் சண்டைகளுக்குமிடமுண்டு. வாரத்தின் முதலிரு நாட்களும் உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

ஒரு தளப்பமானவாரம். மாதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபமுண்டாக்கக்கூடும். செவ்வாய் புதன் வியாழன் அபாயங்களுக்குமிடமுண்டு. ஆனால்பணத்துறையில் நல்ல வாரம்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். பண நிலைமைகள் திருந்த வேண்டும். உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**துலாம் சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

செலவதிகரிக்கும். தேக சுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது குடும்பக் குழப்பங்களுக்கும் நண்பருடன் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. ஒன்றையும் புதியதாய்த் தொடங்க வேண்டாம்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

சுகவீனங்களுக்கு இந்த வாரம் இடமுண்டு. புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். ஆரம்ப இடைஞ்சல்களின் பின் நீர் உம்முடைய முயற்சிகளில் சித்தியடைதல் நிச்சயம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,**

நடைமுறைகளில் சில மாற்றங்களுக்கிடமுண்டு. புதுமுயற்சிகள் சித்தியாகும். ஆனால் வேலை கூடுதலாயிருக்கும் இந்தவாரம் உமக்குக் கீழே வேலை செய்வோருடன் கருமங்கள் செய்வதிற் கவனமாயிருக்கவும்.

**மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். தனலாபம் நிச்சயம். எதிர்ப்பு நீங்கி உம்முடைய முயற்சிகள் பலவற்றில் நீர் சித்தியடைவீர். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

வேலை கூடுதலாயிருக்கும். உமக்கு மனச்சமாதானமுமிருக்கமாட்டாது. தனலாபம்நிச்சயம் ஆனால் செலவும் அதிகரிக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

ஒரு நல்லவாரம். பணநிலைமைகள் திருந்த வேண்டும். வியாழக்கிழமையின் பின் காத்திராத சில நல்ல புதினங்கள் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில். யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 9.11 56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.